அ.வ.எண். 176/2015 நாள்:16.02.2022

பி.சா.1. அவிலாதெரஸ்

குறுக்கு விசாரணை :

வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். வாதி அவர் கிரையம் வாங்கிய நிலத்தில் புல எண். 96/5C ல் 4 செண்ட்ம், புல எண்.96/6J ல் 5 செண்ட்ம் எனக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்றால் எனக்கு மொத்த அளவு தான் தெரியும் இந்த அளவுகள் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கிய மொத்த அளவு 27 குழி. நான் கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தை ஏன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் கேட்கவில்லை. யார் கேட்கவில்லை என்றால் என்னுடைய வழக்கறிஞர் கேட்கவில்லை. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரை, வழக்கறிஞர் ஆணையர் நியமிக்ககோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் உரை மற்றும் வழக்கறிஞர் ஆணையர் அறிக்கைக்கு தாக்கல் செய்துள்ள ஆட்சேபணை ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எங்களுக்கும் வாதிக்கும் நாங்கள் புல எண். 96/6J ல் கிரையம் வாங்கிய 5 செண்ட் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியுள்ள புல எண். 96/6J ல் தற்போது 5 செண்ட் உள்ளதா அல்லது 7 செண்ட் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நான் புல எண். 96/6J ல் 2 செண்ட் கூடுதலாக ஆக்கிரமித்து அனுபவித்து வருவதால் தான் அதில் எத்தனை செண்ட் உள்ளது என்று கூறவில்லை என்றால் சரியல்ல. புல எண். 96/6J ல் நான் கிரையம் வாங்கிய 15 குழி நிலத்தை தவிர அதிகமாக நிலம் உள்ளதா என்று என்னால் உறுதியாக சொல்ல முடியாது என்றால் எனக்கு தெரியாது. புல எண். 96/6J ல் நாங்கள் கிரையம் வாங்கிய 5 செண்ட் நிலத்தை தவிர மற்ற இடத்தில் உரிமை இல்லை என்றால் சரிதான் சாட்சி மீண்டும் நாங்கள் வேலி கட்டி உள்ள இடம் முழுவதும் எங்களுக்கு உரிமையானது என்று கூறுகிறார். புல எண். 96/6J ல் நான் கிரையம் வாங்கிய 15 குழி நிலத்தை தவிர மீதி உள்ள நிலத்தை வாதிக்கு கொடுக்க எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். நான் வழக்கறிஞர் ஆணையர் அறிக்கைக்கு தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையில் புல எண். 96/6J ல் 14 2/3 செண்டில் நாங்கள் 5 செண்ட் நிலம் கிரையம் வாங்கியுள்ளோம் என்று கூறியுள்ளோம் என்றால் சரிதான். அந்த ஆட்சேபணையில் புல எண். 96/6J ல் நான் 21 குழி கிரையம் வாங்கியதாகவும்

கூறியுள்ளேன் என்றால் 27 குழி வாங்கியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையின் ஆட்சேபணையில் புல எண். 96/6J ல் 7 செண்ட் என்னுடைய அனுபவத்தில் உள்ளதாக கூறியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. வழக்கறிஞர் ஆணையர் எங்கள் இடத்தை அளவீடு செய்தார் என்றால் சரிதான்.

வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி தொடர் குறுக்குவிசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

sgs12345

A DHANASEKARAN

Digitally signed by A DHANASEKARAN
Date: 2022.02.17 03:30:36 +0530